உ

கடவுள் துணை.

# தனலட்சுமிக்கும் தைரியலட்சுமிக்கும் தர்க்கம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

113

உ

கடவுள் துணை.

# ஸ்ரீமகாலட்சுமிக்கும் பார்வதிக்கும்

# வார்க்குவாதம்.

———(*)———

## காப்பு - நேரிசை வெண்பா.

திங்கட்சடையாருஞ் செந்திருமாலும்மகிழு
ளெங்களுமைசெந்திருசெய் ஏசலுக்கு-சங்கமில்லாச்
சந்திரனைப்பறித் தனிக்கோட்டிலேயிணைக்குங்
கந்தரத்தின்கற்பகமே காப்பு.

மண்ணெடுத்தடிப்பட்டு வாணிச்சிப்பிட்டு
வாங்கிவாங்கித்தின்றாரோடி யுங்கள்சிவனார் 1
குன்றெடுத்துப்பால்தயிர் வெண்ணைதிருடிக்
குந்திகுந்தித்தின்னாரோடி யுங்கள்பெருமாள் 2
பார்த்தன்கையில் கொண்டிருந்த வில்லடிப்பட்டு
பையப்பையவிழித்தாரோடி யுங்கள்சிவனார் 3
வேர்த்துவிட்பாலுடன் கட்டியிடைச்சி
வீம்புடனடிக்கின்றா ருங்கள்பெருமாள் 4
வேண்டுமென் றசோறுகறி மிக்கவிருக்க
விஷத்தைக்குடித்தாரோடி யுங்கள்சிவனார் 5
மானமுடன்றின்னப்பட்ட வஸ்துவிருக்க
மண்ணைவாரித்தின்றாரோடி யுங்கள்பெருமாள் 6
பசும்பொன்சரப்பளி பதக்கமிருக்கப்
பாப்பணைகளைதரித்தா ருங்கள்சிவனார் 7

தோஷமில்லாதமுத்து நவரத்னமிருக்க
துளசித்தழையேயணிந்தா ருங்கள்பெருமாள் 8
காளியுடன்மிக்கமிக்க வாதுகள்பேசி
காலைதூக்கிபாடினாரே யுங்கள்சிவனார் 9
நீளமுடன்காளிங்க மடுவிற்குதித்து
நின்றவன்மேலாடினாரே யுங்கள்பெருமாள் 10
தங்கையெனவந்தபெருங் கங்கைநதியைத்
தலைமீதில்வைத்தாரேரடி யுங்கள்சிவனார் 11
அந்தமுடனாசைகொண் டிலக்குமிதன்னை
அன்பாகச்சுமந்தாரடி யுங்கள்பெருமாள் 12
சேமக்கலங்கொட்டிக்கொட்டிப் பிச்சையெடுக்கும்
சிற்றாண்டிபையனோடி யுங்கள்சிவனார் 13
ஏமத்திலும்சாமத்திலுந் தப்புகொட்டியே
இறந்துண்ணுந்தாதனோடி யுங்கள்பெருமாள் 14
காடுதனில்நுழைந் தெண்ணாயிரம்பெண்கள்
கற்பழித்தாரல்லவோடி யுங்கள்சிவனார் 15
நாட்டறியப்பதினாயிரம் கோபிகைகளை
நன்மையுடன்கற்பழித்தா ருங்கள்பெருமாள் 16
அந்திசந்தி பத்மாசூரனுக்குப்பயந்தே
ஐவேலிக்காயிலொளிந்தா ருங்கள்சிவனார் 17
தந்தவக்ரன் றூரத்தவோடிக்குகையிற்
றானுழைந்தாரல்லவோடி யுங்கள்பெருமாள் 18
வைத்தகொள்ளும்வைக்கற்புல்லுந் தின்னுமெருதை
வாகனமாபெறினாரே யுங்கள்சிவனார் 19

சுத்தைதுத்துங்கெருடனை வாகனமாக
நாணயமாயேறினாரே யுங்கள்பெருமாள் 20
ஆனைத்தோலும்புலித்தோலும் பாவைபோட்டையும்
அணிந்தவரல்லவோடி யுங்கள்சிவனார் 21
மானமுடன்கானகத்திற் சீதையுடனே
மரவுரிதரித்தாரோடி யுங்கள்பெருமாள் 22
வீடுவாசல்கிடையாமல் சுடுகாட்டிலே
யிற்றிருந்தாரல்லவோடி யுங்கள்சிவனார் 23
நாடுதேசம் வீடுவாசல் காடுகள்விட்டு
நடுக்கடலிற்பள்ளிகொண்டா ருங்கள்பெருமாள் 24
சந்தனங்கெந்தப்பொடி புனுகுமிருக்கச்
சாம்பல்குழைத்துப்பூசினாரே யுங்கள்சிவனார் 25
வந்திரத்திருவருந் திரப்புரத்துவெண்
மண்குழைத்துப்பூசினாரே யுங்கள்பெருமாள் 26
போடிபோடிபண்டாரமாய் வந்தேயொருநாள்
பிள்ளைகறிசோறுதின்றா ருங்கள்சிவனார் 27
வாடிவாடியிடையனாய் வந்தேயொருநாள்
மாட்டுப்பொங்கல்சோறுதின்றா ருங்கள்பெருமாள் 28
முன்னேமுன்னேயுங்கள்சிவ னல்லகுலமோ
மூங்கிலவதரித்தா ருங்கள்சிவனார் 29
என்னடிதாடகை சூர்ப்பனகிநீபோடி
எக்ஷகுலத்துணில்வந்தா ருங்கள்பெருமாள் 30
மதுரையிலேயறுபத்தி காலுருவாகி
வந்துவிளையாடினாரே யுங்கள்சிவனார் 31

விதமுடனாமைபன்றி மீனுருவாகி
விளையாடுங்கிருஷ்ணனல்லவோ வுங்கள்பெருமாள் 32
குவலயத்திலேமுருகன் வள்ளியைக்கொண்டான்
குறக்குலமாகுமோடி யுங்கள்சிவனார் 33
ஆவலுடனாடுமாடு கன்றுகள்மேய்க்கும்
அந்தவிதக்குலமடி யுங்கள்பெருமாள் 34
காடறியுமூரறியுந் தாடகைபோடி
நல்லவரோகெட்டவரோ வுங்கள்சிவனார் 35
சூடுவனான்றுடையிலே சித்திராங்கிபோடி
திருடனல்லோமிகவு முங்கள்பெருமாள் 36
பிரமனைச்சும்மாடுடனே கூலியாளாகிப்
பிரம்பாலடிப்பட்டாரடி யுங்கள்சிவனார் 37
மறுமம்வெளிவிடாதே யென்றிடைச்சி
மத்தாலடிப்பட்டாரடி யுங்கள்பெருமாள் 38
தேருடனேயானைபரி பல்லக்கிருக்கத்
திருட்டுமாடேறினாரே யுங்கள்சிவனார் 39
அம்புவியில்வெய்யலிலே கம்பளிபோர்த்து
அந்தமாடுமேய்த்தாரோடி யுங்கள்பெருமாள் 40
பணமில்லாதநரியைப் பரியதாக்கிப்
பாண்டியனுக்கேகொடுத்தா ருங்கள்சிவனார் 41
சினமுள்ள துரியன்சபையிலே துரோபதைக்கன்று
செவ்வையுடன்றுயிலளித்தா ருங்கள்பெருமாள் 42
ஆவலாயுமையவளைத் தபசுக்கேவிட்டு
அன்றதனியேதிரிந்தா ருங்கள்சிவனார் 43

இராவணனெடுத்துக்கொண்டு போனசீதையை
நாடறியச்சேர்த்தாரடி யுங்கள்பெருமாள் 44
கட்டத்துணிகிடையாமற் காட்டில்கிடந்து
கரியுரியைக்காட்டினாரே யுங்கள்சிவனார் 45
வட்டமுலைகோபிகள் பிடவையையெல்லாம்
வாரிக்கொண்டோடினாரே யுங்கள்பெருமாள் 46
ஓடெடுத்துத்திருநீல கண்டன்மனைவி
லுகந்துசோறுதின்றாரடி யுங்கள்சிவனார் 47
நாடுதோறுமாயர்பாடி வெண்ணைதிருடி
நன்றிபெறத்தின்றாரோடி யுங்கள்பெருமாள் 48
முன்பிறந்தமகனுக்குக் கலியாணஞ்செய்ய
முதலிலாமல்விழிக்கிறா ருங்கள்சிவனார் 49
அன்புடனாலிலைமேற் பள்ளிக்கொண்டு
பங்கமில்லாப்பிள்ளைப்பெற்றா ருங்கள்பெருமாள் 50
வித்துவான்மனையிற்றினம் விறகுசுமந்து
வீணைராகம்பாடினாரே யுங்கள்சிவனார் 51
தாம்புதடிதோளில்வைத்தே யாடுகள்மேய்த்து
தன்மெய்கறுப்பானவர்தா னுங்கள்பெருமாள் 52
அண்டையிலேமண்ணெடுத்து கூலியாளாகி
அமர்ந்தசொக்கனாரோடி யுங்கள்சிவனார் 53
சண்டையிலேயர்ச்சுனன் றன்கூலியாளாகி
சாரத்தியஞ்செய்தாரோடி யுங்கள்பெருமாள் 54
பார்வதிக்கிடப்பாகந் தந்தபடியால்
இபாதிபெண்ணுமாணுமானா ருங்கள்சிவனார் 55

ஆரணியிலேயொளிக்க யீசனுருந்தன்
அப்போதொருபெண்ணுய்வந்தா ருங்கள்பெருமான் 56
பாங்குடனேவேடனுக வோடியேவந்து
பன்றிக்கொம்பைமுறித்தாரோடி யுங்கள்சிவனுர் 57
ஆங்காரமாய்க்கம்சன் முன்னனுப்பிய
ஆனைகொம்பைமுறித்தாரோடி யுங்கள்பெருமாள் 58
இங்கிதமாய்த்தில்லையிலே யாடெடுத்தவர்
இல்லையென் றும்மழுவெடுத்தாருங்கள்சிவனுர் 59
துங்கவாயர்பாடிபெண்கள் கண்டுபிடித்து
தூதனென்றுநெய்யில்கையிட்டா ருங்கள்வெருமாள் 60
கிட்டவந்துவர்ச்சுனனும் கட்டிப்புரட்ட
கீழேவிழுந்துதவித்தாரோடி யுங்கள்சிவனுர் 61
கட்டுணிகுட்டுணியவன் தூதாகிப்போய்
கால்சிவக்கவிழுந்தாரேடி யுங்கள்பெருமாள் 62
எழுந்திருந்துமார்க்கண்டனுக்காகவந்து
இயமனையுதைத்தாரேடி யுங்கள்சிவனுர் 63
அழிந்திக்கல்லாயிருந்த பெண்ணையுதைத்தே
அன்றுமருதமரமுதைததா ருங்கள்பெருமாள் 64
குடிமாரன்கொல்லையிலே விதைத்தவிதையைக்
கொண்டுவந்துசோறுதின்ரு ருங்கள்சிவனுர் 65
இடிமழையிந்திரன்பெய்ய மலையைக்கொடையாய்
எடுத்துப்பொங்கல்சோறுதின்ரு ருங்கள்பெருமாள் 66
தங்கக்கிரீடம்பாகையையும மற்றுமிருக்கச்
சடைவளர்த்துகட்டினுரே உங்கள்சிவனுர் 67

துங்கமணித்தூராய்கள் பலவுமிருக்கச்
சூடினரேமயிலிறகை யுங்கள்பெருமாள் 68
மாட்டுப்பாலைத்தான்குடித்து இடையன்கையால்
மண்வெட்டியால்வெட்டுபட்டா ருங்கள்சிவனார் 69
காட்டிலேகிடைத்ததையும் பேய்முலைப்பாலைக்
கண்ணக்கண்ணவுண்டாரோடி யுங்கள்பெருமாள் 70
நக்சுனென் றுபேர்படைத்து சுனையில்வந்து
நாடிப்பூந்துகொண்டாரோடி யுங்கள்சிவனார் 71
தக்கவிருகண்ணில்லா ததிபாண்டன்வீட்டில்
சாலுக்குள்ளேபுகுந்தாரோடி யுங்கள்பெருமாள் 72
பாசுபதம்வாங்கிவந்த வர்ச்சுனன்முன்னே
பார்த்தெரிந்தாராகமத்தி லுங்கள்சிவனார் 73
காசினியில்கஞ்சனொரு காளையாய்வரக்
காலைதூக்கிவிளாம்பழமுதிர்த்தா ருங்கள்பெருமாள் 74
திக்குபுகழ்நக்கனேடி யுங்கள்சிவனார்
திருவாதிரைக்களிதின்றா ருங்கள்சிவனார் 75
வக்காப்போலக்கத்துகிற யிரணியன்மார்பை
வகிர்ந்துதிரங்குடித்தாரோடி யுங்கள்பெருமாள் 76
பாரிலொருகுட்டிக்கு முலைப்பால்கொடுத்து
பன்றியாகவந்தாரோடி யுங்கள்சிவனார் 77
காரியமாய்ப்பூமியெல்லா மூக்காலேவிழக்
கரப்பன்றியானாரோடி யுங்கள்பெருமாள் 78

வாக்குவாதம் - முற்றிற்று.